விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 310 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 07 வியாழக்கிழமை (24.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மீது
# அறுகம்பேயில் தாக்குதல் திட்டம்!

- இஸ்ரேல், அமெரிக்கா, இந்தியா, ரஷ்யா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து தங்களது நாட்டுப்பிரஜைகளுக்கு எச்சரிக்கை.
- 500 பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினர் அறுகம்பேயில் குவிப்பு.
- பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு இஸ்ரேலியர்களுக்கு அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## அராலியில் இரண்டு இடங்களில் மின்னல் தாக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அராலிப் பகுதியில் நேற்று இரண்டு இடங்களில் மின்னல் தாக்கிய சம்பவங்கள் ▷15

### தொண்டைமானாறில்
## விபரீத முடிவெடுத்தவர் உயிரிழப்பு

(கரணவாய்)

தொண்டைமானாறில் விபரீத முடிவெடுத்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் தொண்டைமானாறு பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த ▷15

### ஜனாதிபதி அநுரவை எப்படிப் பார்க்கிறீர்கள்?
## சிறீதரன், சித்தார்த்தனிடம்
## நேரில் கேட்டார் அமெரிக்கத் தூதுவர்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை எப்படிப் பார்க்கின்றீர்கள்? என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சித்தார்த்தனிடம் கேட்டார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்.

யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள அமெரிக்கத் தூதர் ஜூலி சங் நேற்று சிறீதரன் மற்றும் சித்தார்த்தனை நேரில் சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பு குறித்து ▷04

## இளம் வேட்பாளர் யாழில் மரணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயக தேசியக் கூட்டணி சார்பாகப் போட்டியிடும் இளம் வேட்பாளர் செந்தில்வேல் தமிழினியன் நேற்றுக் காலை மரணமடைந்துள்ளார்.

திடீர் நோய்வாய்ப்பட்டு ▷15

### வன்னித் தேர்தல் மாவட்டத்தில்
## நிராகரிக்கப்பட்ட வேட்புமனுவை ஏற்குக
### உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்காக வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயக தேசிய ▷15

## அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நான் ஒதுக்கிய நிதி எங்கே?
### அநுரவிடம் ரணில் விக்கிரமசிங்க கேள்வி



(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நான் ஒதுக்கிய நிதி எங்கே? என ஜனாதிபதி அநுரவிடம் முன்னாள் ஜனாதிபதி ரணில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அரச ஊழியர்களின் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் ரணில் ▷15

### பருத்தித்துறை நீதிமன்றில்
## கழுத்து, கையை அறுத்த சந்தேக நபர்

(பருத்தித்துறை)

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் தனக்கு நீதிமன்றத்தால் பிணை வழங்கவில்லை என்பதால் தனது கழுத்தி ▷15

## முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ
### கைதாகி விளக்கமறியலில்



(கொழும்பு)

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் ஒக் ▷15

## நாய் குறுக்கே சென்றதில் மோ.சைக்கிள் விபத்து
### யாழ்.போதனாவில் இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

நாய் வீதிக்குக் குறுக்கே சென்றதில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இதில் முல்லைத்தீவு வெலிஓயா, கிரிபன்னா பகுதியைச் சேர்ந்த எஸ்.எல்.சம்பத் குமார (வயது-21)என்ற இளைஞரே உயிரிழந்துள் ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.
**திருமதி செல்வராசா விஜயமலர் (மலர்)**

தோற்றம் 21.11.1952 மறைவு 03.11.2015

திதி : அபரபக்க அட்டமி 24.10.2024

ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்தது
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சங்களை விட்டகலாது
அன்பின் உயிராய்
எம் நெஞ்சங்களில் என்றும்
நீங்கள் நிலைத்து வாழ்வீர்கள்

இல.57,
பிரம்படி லேன்,
கொக்குவில்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(465)

# மரண அறிவித்தல்



தோற்றம் 05 - 05 - 1971 மறைவு 23 - 10 - 2024

## நடராஜா இராஜேஸ்வரன்

**(அபிவிருத்தி இணைப்பாளர், பிரதேச செயலகம் – யாழ்ப்பாணம்)**

'ஈஸ்வரபவனம்'கதிர்காம கோவிலடி, வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் இல.92, யாழ். றோட், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா இராஜேஸ்வரன் அவர்கள் நேற்று (23.10.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் உஷாநந்தினி அவர்களின் அன்புக் கணவரும் நிகாஷன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - ஆண்டு 10 மாணவன்) அவர்களின் பாசமிகு தந்தையும் ஈஸ்வரன், தயாளேஸ்வரன் (டென்மார்க்), சிவனேஸ்வரன்(கனடா), ஜெகதீஸ்வரி (நியூசிலாந்து), சர்வேஸ்வரன் (பிரதி திட்டமிடல் பணிப்பாளர் - பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), இராஜேஸ்வரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச சபை, கரவெட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), விமலரதி, நித்தியகலா, ஸ்ரீதரன்(சிறிராம் ஜீவல்லர்ஸ், கொனிக்கா கலர்லாப்), விஜயகுமாரி, ரவீந்திரகுமார்(லண்டன்), ஜெயசீலன் (சானுகா ஜீவல்லர்ஸ்), ஸ்ரீசக்திவேல்(சிறீ மீனாட்சி ஜீவல்லர்ஸ்), நிகிலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2024) வியாழக்கிழமை மதியம் 01.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 03.00 மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.92, யாழ்.றோட், 021 222 8407
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 077 749 9404(மகன்)

# மரண அறிவித்தல்



பிறப்பு 08 - 03 - 1940 இறப்பு 21 - 10 - 2024

## பண்டிதை நடராசா மங்கையற்கரசி

காரைநகர் களபூமி விளானையைப் பிறப்பிடமாகவும், 6ம் ஒழுங்கை கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதை நடராசா மங்கையற்கரசி அவர்கள் 2024.10.21 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்(Legal Advisor Times Of Ceylon) - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா(S.K மாஸ்டர்) - சிவகாமசுந்தரி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராசா (ஹாட்லிக் கல்லூரி முன்னாள் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் ஞானசம்பந்தன்(பொறியியலாளர்- அவுஸ்திரேலியா), சிவமலர் (அவுஸ்திரேலியா), சிவனருட்செல்வன் (ஆசிரியர் களு/ஜிலான் மத்திய கல்லூரி - பாணந்துறை), சிவசக்தி (ஆசிரியர் யா/திருக்குடும்ப கன்னியர்மடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மாலினி (அவுஸ்திரேலியா), சிவபாதம்(பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), சிவமங்கை(உதவி அதிபர் கொ/ விவேகானந்தா கல்லூரி), தர்மலிங்கம்(பிரதிக் கல்விப் பணிப்பாளர் - தீவகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பண்டிதை புனிதவதியார் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற சிவபாதவிருதயர்(ஓய்வு பெற்ற ஆசிரியர்) மற்றும் சுந்தரமூர்த்தி(மொழி0பெயர்ப்பாளர் - அவுஸ்திரேலியா), அருணந்தி (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), வைத்தியகலாநிதி சிவனேஸ்வரி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து (ஓய்வு பெற்ற விவசாய போதனாசிரியர்), மகேஸ்வரி மற்றும் சிவரஞ்சினி(அவுஸ்திரேலியா), வைத்திய கலாநிதி சாலினி (அவுஸ்திரேலியா), செல்லையா (கணக்காளர் - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் மயூரன், மாதங்கி, சியாமர், சுவாதி, சிவஹர்சினி, அமலன், தரசுதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (25.10.2024) வெள்ளிக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் மு.ப 09.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

25, ... ஒழுங்கை,
... வீதி, கந்தர்மடம்.

(2386)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரவி, சானி ஆகியோரை பாதுகாக்க அரசு முயற்சி

## உதய கம்மன்பில சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**ரவி செனவிரத்ன, சானி அபேசேகர ஆகியோரை மாத்திரம் பாதுகாக்க அரசாங்கம் ஏன் முயற்சிக்க வேண்டும் என்றும் உதய கம்மன்பில கேள்வியெழுப்பியுள்ளார்.**

அல்விஸ் அறிக்கையை ஏற்க முடியாது என்பதற்கு அரசாங்கம் குறிப்பிடும் காரணம் சிறுபிள்ளைத்தனமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

ஈஸ்டர் தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஏ.என்.ஜே. டி அல்விஸ் அறிக்கையை சமர்ப்பித்த குழுவையும் தன்னையும் குற்றஞ்சாட்டுவதை விடுத்து, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையா பொய்யா என்பது தொடர்பில் அமைச்சர் விஜித ஹேரத் விசாரணை நடத்த வேண்டும்.

இந்தக் குழுவின் தலைவராக பதவி வகித்த நீதியரசர் அல்விஸ் 2006 முதல் 2023 வரையான காலப்பகுதியில் வழங்கிய தீர்ப்புக்களை இரத்து செய்ய முடியுமா? எனவும் உதய கம்மன்பில கேள்வியெழுப்பியுள்ளார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களை ரவி செனவிரத்ன 12 நாட்கள் மூடி மறைத்தது உண்மையா? பொய்யா? என அரசாங்கம் நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் உதய கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.

அல்விஸ் அறிக்கையில் நிலந்த, பூஜித, தேசபந்து உட்பட 17 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-8)

# போரை முடித்து வைத்த மகிந்தவை அநுர அரசு பாதுகாக்க வேண்டும்

## என்கிறார் நாமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

"நாட்டை பிளவுபடுத்துவதற்கு புலிப் பயங்கரவாதிகள், டயஸ்போராக்களாக முயற்சித்து வரும் சூழ்நிலையில், போரை முடிவுக்கு கொண்டுவந்த மகிந்த ராஜபக்சவை பாதுகாக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்" என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"புலிப் பயங்கரவாதிகள், டயஸ்போராக்களாக இந்நாட்டை பிளவுபடுத்துவதற்கும், தமது இலக்கை அடைவதற்கும் தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர். அதேபோல உலகெவில் அடிப்படைவாதம், பிரிவினைவாதம் மற்றும் தீவிரவாதம் தலைதூக்கியுள்ளன.

இவற்றுக்கு எதிராக போராடி, போரை முடித்த தலைவருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசின் கடப்பாடாகும்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துகொடுக்க வேண்டியதும் அரசின் பொறுப்பாகும்.

அதேவேளை எமது அரசியல் முகாம்தான் இந்நாட்டை அபிவிருத்தி செய்தது. எனவே நாட்டை வீழ்துவதற்குரிய



குரோத அரசியலில் ஈடுபடுவதற்கு நாம் தயாரில்லை.

உலகில் எந்நாட்டுக்கு வேண்டுமானாலும் செல்லுங்கள். ராஜபக்சக்கள் சட்டவிரோதமாக எதையேனும் சேமித்து வைத்திருந்தால் அவற்றை கொண்டுவாருங்கள். அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும்." என அவர் தெரிவித்தார். (நி-8)

# தபால் ஊழியர்களின் விடுமுறைகள் ரத்து

## பிரதி தபால்மா அதிபர்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு தபால் திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களின் விடுமுறையையும் இரத்துச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றிலிருந்து நவம்பர் 14 ஆம் திகதி வரை விடுமுறை ரத்து செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளதாக பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் ஏதேனும் சுகவீனம் அல்லது அவசியமான பணிகளுக்காக விடுமுறை எடுப்பது அவசியமானால் மாகாண பிரதி தபால் மா அதிபரின் ஒப்புதலுக்கு அமைய



விடுமுறை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தல் தொடர்பான பதிவு செய்யப்பட்ட தபால்மூல வாக்கு கையிருப்பு பொதிகளை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை இடம்பெறவுள்ளதாக பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார். (நி-8)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுகம்பே...

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவிலுக்கு அருகில் அமைந்துள்ள அறுகம்பே, சர்பிங் செய்பவர்கள் அடிக்கடி வரும் உலகின் மிகவும் கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும். அந்தப் பகுதி இஸ்ரேலியர்கள் அதிகம் கூடும் பகுதியும் கூட. இவ்வாறானதொரு பின்னணியில் அறுகம்பே பகுதியில் தங்கியுள்ள இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தும் திட்டம் இருப்பதாக இந்திய புலனாய்வு அமைப்புகள் அந்நாட்டு பாதுகாப்புப் படையினருக்கு அறிவித்துள்ளன. இதே வேளை இது தொடர்பான தாக்குதல் அக்டோபர் 19 முதல் 23 வரை நடத்தப்படலாம் என இந்திய உளவு அமைப்புகள் தெரிவித்துள்ளன. இலங்கையைச் சேர்ந்த இருவர் தாக்குதல் நடத்தத் தயாராக இருப்பதாகவும் அவர்களில் ஒருவர் ஈராக்கைச் சேர்ந்தவர் என்றும் புலனாய்வுப் பிரிவினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்காக அவர்களுக்கு சுமார் 50 இலட்சம் ரூபா வழங்கப்பட்டதாகவும் அந்தத் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி குறித்த இருவரின் பெயர்கள் உள்ளிட்ட அனைத்து தகவல்களும் இந்திய புலனாய்வு அமைப்புகளால் இந்நாட்டு பாதுகாப்பு படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது. அண்மைய நாட்களில் ஹிஸ்புல்லாஹ் தலைவர்களை இஸ்ரேல் கொன்றமைக்கு பழிவாங்கும் முகமாக இந்த நாட்டில் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த தகவலைப் பெற்றுக்கொண்ட பாதுகாப்பு தரப்பினர் சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பலப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், அறுகம்பே பகுதியில் உள்ள பிரபல சுற்றுலா இடங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படும் என அமெரிக்க தூதரகம் நேற்று காலை எச்சரிக்கை விடுத்ததையடுத்து, உலக நாடுகள் பல இலங்கைக்கு விஜயம் செய்வது தொடர்பில் தமது பிரஜைகளுக்கு எச்சரித்துள்ளது.

அதன்படி அறுகம்பே சுற்றுலாப் பகுதிக்குச் செல்லும் ரஷ்ய பிரஜைகள் அவதானமாக இருக்குமாறு கொழும்பில் உள்ள ரஷ்ய தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதிக மக்கள் கூடும் இடங்களுக்கு செல்வதனை தவிர்க்குமாறும் தம் நாட்டு பிரஜைகளிடம் ரஷ்ய தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் ஐக்கிய இராச்சியம் இலங்கைக்கான பயண ஆலோசனைகளை புதுப்பித்துள்ளது.

மேலும் அறுகம்பே பகுதிக்கு செல்வதை தவிர்க்குமாறு கனடா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளும் இலங்கைக்கு விஜயம் செய்வது தொடர்பில் தமது பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

மேலும், இலங்கையின் அறுகம்பே மற்றும் தென் மற்றும் மேல் கடற்கரைப் பகுதிகளில் இருந்து இஸ்ரேலிய நாட்டவர்களை உடனடியாக வெளியேறுமாறும், அங்கு பயங்கரவாத அச்சுறுத்தல் இருப்பதாகவும் இஸ்ரேலியர்களுக்கு அந்த நாட்டு பாதுகாப்பு சபை அறிவுறுத்தியுள்ளது.

இந்த பகுதிகளில் தங்கியுள்ள இஸ்ரேலியர்கள், இலங்கையில் இருந்து உடனடியாக வெளியேறுமாறும் அல்லது குறைந்தபட்சம் கொழும்புக்கு நகருமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அறுகம்பே பிரதேசத்தில் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அறுகம்பே சுற்றுலாப் பகுதியின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக சுமார் 500 பொலிஸ் அதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பிரதேசத்தில் பாதுகாப்பை பலப்படுத்துவது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரும் ஏனைய பாதுகாப்பு நிறுவனங்களும் அவதானம் செலுத்தி வருவதாகவும் அவர் கூறினார். (ம-7)

# ராகுலை விடுவித்தது லக்னோ அணி நிர்வாகம்



ஐ.பி.எல் 2025 தொடருக்கான மெகா ஏலம் அடுத்த மாதம் சவுதி அரேபியாவில் நடக்கவுள்ளது.

கடந்த 3 சீசன்களாக லக்னோ அணியின் கப்டனாக கேஎல் ராகுல் செயற்பட்டு வந்தார்.

ஐ.பி.எல் 2025 தொடருக்கான மெகா ஏலம் அடுத்த மாதம் சவுதி அரேபியாவில் நடக்கவுள்ளது. அதற் காக 10 அணிகளின் நிர்வாகங்களும் தீவிரமாகத் தயாராகி வருகின்றனர்.

இந்த மெகா ஏலத்திற்கு முன்பு எந்தெந்த அணி எந்தெந்த வீரர்களை தக்க வைத்துக் கொள்கிறோம் என்பதை வரும் எதிர்வரும் 31 ஆம் திகதி மாலை 5 மணிக்குள் தெரிவிக்க வேண்டும்.

இந்நிலையில் லக்னோ அணியின் கப்டன் கேஎல் ராகுல் அந்த அணியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். கடந்த 3 சீசன்களாக கேஎல் ராகுல் கப்டனாக செயற்பட்டு வந்த நிலையில் அவரது ஆட்டம் அணியின் நிர்வாகத்துக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. இதனால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மேலும் இந்திய அணியில் இடம் பிடித்த வேகப் பந்துவீச்சாளர் மயங்க் யாதவ், பூரன், ரவி பிஷ்னோய் ஆகியோரை ரீடெய்ன் செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-8)

# இந்திய தொடரில் விளையாட விருப்பம்

## டேவிட் வோர்னர்



இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்க, ஓய்வு பெற்ற வார்னர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா செல்வுள்ள இந்திய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட "பார்டர்-கவாஸ்கர் டிராபி" டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் வரும் நவம்பர் 22 இல் பெர்த் தில் தொடங்குகிறது. மீதமுள்ள போட்டிகள் அடிலெய்டு (டிசம்பர். 6-10), பிரிஸ்பேன் (டிசம்பர். 14-18), மெல்போர்ன் (டிசம்பர். 26-30), சிட்னியில் (2025, ஜனவரி. 3-7) நடக்கவுள்ளன.

இதுகுறித்து, இந்த ஆண்டு தொடக்கத்தில் டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்ற அவுஸ்திரேலிய அணி தொடக்க வீரர் டேவிட் வார்னர் 37, கூறியது.

ஒரு அலைபேசி அழைப்பு போதும், அவுஸ்திரேலிய அணிக்காக எப்போதும் விளையாடத் தயாராக உள்ளேன். உண்மையில், கடந்த பெப்ரவரி மாதத்திற்குப் பின், இதுவரை, அவுஸ்திரேலிய வீரர்கள் ஒரு டெஸ்டில் தான் பங்கேற்றுள்ளனர். இதனால் நானும் உங்களைப் போன்று தான் தயாராகி வருகிறேன்.

ஒருவேளை எனது பங்களிப்பு அணிக்கு தேவை என்றால், அடுத்த போட்டியில் மகிழ்ச்சியுடன் விளையாடுவேன் எனத் தெரிவித்தார். (6-8)

## சிறீதரன்...

கருத்துத் தெரிவித்த சித்தார்த்தன், புதிய ஜனாதிபதி அநுரவை எப்படி பார்க்கிறீர்கள் என அமெரிக்கத் தூதவர் கேள்வி எழுப்பினார். புதியவர் என்பதால் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்றேன் என்றார்.

மேலும் பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார் என்று தெரிவித்தார். (ம-7)


### வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள வேலை ஆட்கள் தேவை.

- விற்பனையாளர்
- பைக்கிங் செய்பவர்
- சிட்டை போடுபவர்


குறிப்பு : யாழ். நகரை அண்டி உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**077 748 8093**

(2391)


# மரண அறிவித்தல்

## செல்லத்துரை தவராசா



பிறப்பு 22.04.1944 இறப்பு 23.10.2024

சிவன் வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தவராசா நேற்று (23.10.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தையல்முத்து தம்பதிகளின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற ரதிதேவி அவர்களின் பாசமிகு கணவரும் பிரதீபன், ஜெனித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜி, சிவராஜன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அபிஷா, சாருஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் இராணிமலர், கனகாம்பிகை, மகேந்திரராசா, மல்லிகாதேவி, மன்மதராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான யோகநாதன், நவபாலன் மற்றும் ரதிக்குமாரி, ஸ்ரீகாந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (25.10.2024) வெள்ளிக்கிழமை மு.ப 09.00 மணியளவில் இல.69, துதி அந்தியகால சேவை, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் இடம்பெற்று பூதவுடல் அஞ்சலிக்காகவும், தகனக்கிரியைக்காகவும் கோண்டாவில் வடக்கு கலைவாணி மக்கள் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கோண்டாவில். (2392) தகவல்: த.பிரதீபன் (மகன்)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர். நடராஜா இராஜேஸ்வரன்

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தோற்றம் 05.05.1971 மறைவு 23.10.2024

அன்னாரின் பிரிவின் துயரில்

கொனிக்கா கலர் லாப், சிறிராம் ஜுவல்லர்ஸ் உரிமையாளர் மற்றும் ஊழியர்கள்.

(2390)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கடன்கள் எதுவும் பெறப்படவில்லை- விஜிதஹேரத்

(கொழும்பு)

வழமையான செயற்பாடுகளுக் கப்பால் வெளிநாடுகளிடமிருந்தோ அல்லது வேறு நிறுவனங்களிட மிருந்தோ அரசாங்கம் கடன் பெற வில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரி வித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப் பிலேயே இதனைக் குறிப்பிட் டார்.

புதிதாக எந்தவொரு நாட்டி லிருந்தும் நாங்கள் கடன்பெற வில்லை.

திறைசேரி பத்திரங்கள் மற்றும் பிணைமுறிகள் காலாவதியாகும் போது புதிதாக பிணைமுறி வெளியிடுவது மத்திய வங்கியில் இடம்பெறும் வழமையான செயற்பாடாகும்.

அதற்கு அப்பால் புதிதாக வேறு எங்கிருந்தும் கடன் பெறவில்லை.

திறைசேரியும் இதுதொடர்பில் விளக்கமளித் திருந்தது.பிணை முறிகளுக்கான காலம் முடிவுறும் போது புதிய பிணைமுறி பத் திரங்கள் வெளியிடப்படும்.

இது ஒரு வட்டச் செயற்பாட்டை போன்று எதிர்காலத்திலும் இடம் பெறும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (நி-8)


## வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு | கழுத்து வலி | கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்

நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)

தொடர்புகளுக்கு : 0777 301 669


(2383)


## பொதுச் செயலாளராக சிவகஜன் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல் கலைக்கழக மாண வர் ஒன்றியத்திற்கு புதிய பொதுச் செய லாளராக கலைப்பீடத் தைச் சேர்ந்த சி.சிவ கஜன் தேர்வாகியுள் ளார். இதுவரை கால மும் பொதுச் செயலா ளராக சோ.சிந்துஜன் பொறுப்பு வகித்திருந் தமை குறிப்பிடத்தக் கது. (6-8)


## விற்பனைக்கு




பருத்தித்துறை நகரில் கடை விற்பனைக்கு உண்டு.

பார்வையிடும் நேரம்
12.00-1.00 மணிவரை
தொடர்பு கொள்ளும் நேரம்
9.00-4.00 மணிவரை
தரகர் தேவையில்லை

(2368)

தொடர்பு:- 077 344 3034



## தேய்பிறை அட்டமி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தலை யாழி சாமுண்டா தேவி சமேத ஸ்ரீ ஞான வைரவர் ஆல யத்தில் தேய்பிறை அட்டமி உற்சவம் இன்று வியாழக் கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும்.

இதன் போது விஷேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து வசந்த மண்டப பூஜை வழி பாடும் சகஸ்ரநாம அர்ச்சனையும் இடம் பெறும் என ஆலய பரி பாலன சபையினர் அறி வித்துள்ளனர். (6-8)


## மரண அறிவித்தல்



### வல்லிபுரம் கமலநாதன் (கண்ணன்)

(ஓய்வு பெற்ற உதவி அதிகாரி இலங்கை கனியவள கூட்டுத்தாபனம்-புல்மோட்டை)

சங்கானை கூடத்தம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கு, சொய்சாபுரம் மொறட்டுவ வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கமலநாதன் அவர்கள் 20.10.2024 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகசிங்கம்- கனகேஸ்வரி(ஆச்சி) அவர்களின் அன்பு மருமகனும், மாலினியின் அன்புக் கணவரும் பிருந்தாவன்(பிரான்ஸ்), அபிராமி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கஜறூபனின்(பிரான்ஸ்) அன்பு மாமனாரும். காலஞ் சென்றவர்களான சிவயோகநாதன், சுப்பிரமணியம், மகேந்திரன், இரத்தினமலர் மற்றும் கணேசநாதன்(லண்டன்), சண்முகநாத முதலி(ஓய்வுபெற்ற முகாமையாளர்- மக்கள்வங்கி), சிறிபத்மநாதன் (லண்டன்), நல்லைநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரனும் ரவீந்திரன்(கனடா), குகேந்திரன்(லண்டன்), சுரேந்திரன் (கனடா), பிரியதர்ஷனி(கனடா), சுமித்திரன்(சுவிஸ்), ரஜி(கனடா) காலஞ்சென்ற வர்களான நோனாம்பிகை, பூபாலசிங்கம் மற்றும் குணவதி, கலாமதி, திருமகள், றெஜினா, விஜயகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அக்ஷயன், அக்சாயினி, அஷ்சிதன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 26.10.2024 சனிக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு 27.10.2024 ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தெஹிவளை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(2378)

B-1, G-7 சொய்சாபுரம் பிளட்ஸ், மொறட்டுவ.

தகவல்-குடும்பத்தினர்.
076 940 7066, 077 819 9240


## இராசிபலன்

24.10.2024
ஐப்பசி 07, வியாழக்கிழமை
சப்தமி முற்பகல் 7.04 மணிவரை

புநர்பூசம் பிற்பகல் 12.09 மணிவரை
சுபநேரம் -7.32-9.02 மணிவரை
இராகுகாலம் - 1.32-3.02 மணிவரை

சந்திராஷ்டமம் - அனுசம், கேட்டை.

வளவன்

**மேஷம்** பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,வெளி யூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுப விரயங்கள் கூடும் நாள்

**கடகம்** கொடுக்கல் வாங்கல் களில் கவனம் தேவை, விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்** குடும்பத்தினரின் ஒத் துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண் பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** நண்பர்களால் வள ர்ச்சி கூடும்,நினைத்த காரியம் நிறைவேறும் நாள், புதிய பொருட் களை வாங்கி மகிழும் வாய்ப் புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**ரிஷபம்** தொழிலை விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், நினைத் ததை முடித்து நிம் மதி காணும் நாள், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும்.

**சிம்மம்** உறவினர்களைக் காண பயணமொன்றை மேற் கொள்ளும் சூழ்நிலை ஏற்படலாம்,தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், சுப விர யங்கள் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்து சம்பந்தபட்ட வகையில் நன்மையுண்டு, ரோக பயமுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுறுசுறுப்போடு செயற்படு வீர்கள்.

**கும்பம்** கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமா ளிப்பீர்கள், மறைமுக போட்டிகள் மாறும், நம்பிக்கைகள் நடைபெற இஷ் தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** குடும்ப மகிழ்ச்சி அதி கரிக்கும், நாவன்மை யால் நல்ல பெயர் கிடைக்கும், தொழி லில் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** உறவினர் வழியில் ஒத் துழைப்புக்கள் கிடைக் கும் வாய்ப்புண்டு, வருங் கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செல்வ நிலை உயரும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடு களில் குறைகண்டு கூறலாம், எதையும் சிந்தித்து செயற்படுத்த வேண்டிய நாள், கவலைகள் தீர இஷ்ட தெய் வத்தை வழிபட வேண்டிய நாள்.


**மீனம்** தடைப்பட்ட காரியங் களில் முன்னேற்றம் காணும் நாள், பெரிய மனிதர்களின் தொடர் புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி ஏற்படும் நாள்.

**கடன் இல்லாதவனே பணக்காரன், உடல் ஆரோக்கியம் உள்ளவனே செல்வந்தன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அபிவிருத்திக்கு பூரண ஒத்துழைப்பு

## வடக்கு ஆளுநரிடம் அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோர் இருவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண அபிவிருத்தி செயற்பாடுகள், கல்வி, சுற்றுலாத்துறை, காணி விடுவிப்பு, போக்குவரத்து வசதிகள், தொழில் வாய்ப்புகள், முதலீட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

அமெரிக்க தூதுவர் காணி விடுவிப்பு தொடர்பாக விபரங்களை ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார். மேலும் ஜனாதிபதியின் வழிகாட்டுதல்களுக்கு அமைய காணி விடுவிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என ஆளுநர் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் காணி சம்பந்தப்பட்ட பிணக்குகள், சட்டவிரோத காணி ஆக்கிரமிப்புகள் பாரியளவில் காணப்படுகின்றன எனவும் அவற்றை தீர்ப்பதற்கு தற்போது உள்ள அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து சாதகமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

ஆளுநர் வடக்கில் காணப்படும் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப் புகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கைக்கான அமெரிக்க தூதுவரிடம் கேட்டுக் கொண்டார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் வடக்கு மாகாண அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்கத் தயாராக உள்ளதாக தெரிவித்ததுடன் ஆளுநரிடமிருந்தும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (6-8)

# எரிவாயு விலையை அதிகரிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

உள்நாட்டு சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட வேண்டுமென இலங்கையில் எரிவாயு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

உலக சந்தையில் எரிவாயு வழங்குனர்கள் தமது விலையை அதிகரித்துள்ளதாகவும் இதன் காரணமாக உள்நாட்டில் விற்பனை செய்யப்படும் எரிவாயுவின் விலையும் அதிகரிக்கப்பட வேண்டுமென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு செய்யா விட்டால், தங்களது இயக்கச் செலவுகளை ஈடுகட்டுவதில் கடும் நெருக்கடி ஏற்படும் என்றும் அந்த நிறு வனங்கள் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனடிப்படையில் இம்மாதம் 30 ஆம் திகதி எரிவாயு விலை திருத்தத்தின் போது உரிய விலை உயர்வு இடம் பெறும் என நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்மையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# வணிக பீடத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடக் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது 50 ஆவது வருட நிறைவில் பொன் விழாக் காணும் சமகாலத்தில், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறன்றமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# கைவிடப்பட்ட கார்



(யாழ்ப்பாணம்)

யாழ். காங்கேசன்துறை வீதியில் தாவடிச் சந்திக்கு அருகே கார் ஒன்று வீதியோரம் அநாதரவாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக நேற்று முன்தினம் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் காரின் இலக்கம் மற்றும் புகைப்படங்களை சேகரித்து மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (6-8)

# சடலம் உரிமைகோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் கடந்த 27.08.2024 அன்று அனு மதிக்கப்பட்ட என். சிவகுமார் வயது 58 என் பவர் கடந்த 1.09.2024 அன்று இறந்து விட்டார்.

இவர் உருத்திரபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்டவர். இவருடைய சடலத்தையாரும் உரிமை கோராமல் உடல் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே இவரின் உடலை அடையாளம் காட்டி 14 தினங்களுக்குள் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6-8)

# போதை மாத்திரைகள் மீட்பு- ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் 1400 போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பகுதியில் போதை மாத்திரைகளுடன் ஒருவர் நடமாடுவதாகப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்தனர்.

சந்தேகநபரிடம் இருந்து 1400 போதை மாத்திரைகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து அவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (6-8-33)

# தேர்தல்களம்




## தேர்தல் வாக்குறுதிகள் வெறும் சொற்களாக இருக்காது

### மான் சின்னத்தில் போட்டியிடும் பார்த்தீபன்



தமிழ் தேசியத்தின் எழுச்சிக் கனவுகளுடன் சுயநலமற்று தன்நலம் கருதாது உங்களுடன் இறுகக் கைகோர்த்து இறுதி வரை பயணிபபேன் இது என் வாக்குறுதி மட்டும் அல்ல மனஉறுதியும் கூட என வரதராஜன் பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் மான் சின்னத்தில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் வ.பார்த்தீபன் தனது முகநூல் பதிவில் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

ஆரம்பம் முதல் தனது இறுதிக்காலம் வரை தமிழ் தேசியத்தின் மீது தீராத காதல் கொண்ட என்னுடைய அப்பாவின் அரசியல் சிந்தனை களையும் கனவுகளையும் தொடர்ந்து கொண்டு செல்வதே ஒரு மகனாக என்னுடைய கடமையாகும்.

இத் தேர்தலில் வெற்றி தோல்விகளுக்கு அப்பால் என்னுடைய வாழ்வியலில் தேர்தல் பொதுவாழ்வியல் எவ்வாறு அமையும் என்பதனையும் உள்ளடக்கியதுமாக என்னுடைய தேர்தல் விஞ்ஞாபனம் உள்ளது.

அது வெறும் சொற்களாக அல்லது வெறும் வாக்குறுதிகளாக மட்டும் இருக்காது. உலகின் தலைசிறந்த சொல்லாகிய செயல்களாகவே இயன்றவரை இருக்கும் என அவர் பதிவிட்டுள்ளார். (6-8)

## எது ஜனநாயகம்? மக்களே தீர்மானியுங்கள்

### இலங்கை தமிழரசுக் கட்சி வேட்பாளர் சயந்தன்



பதவிக் கதிரைகளை விட்டு போக மாட்டோம் என்று சொல்லுவது ஜனநாயக மறுப்பா? அல்லது புதுமுகங்களுக்கு வாய்ப்பு கொடுப்பது ஜனநாயகமா என்பதனை நீங்களே சிந்தித்துப் செயற்படுங்கள் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளரும் சட்டத் தரணியுமான கே.சயந்தன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழில் இடம்பெற்ற இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு அரசியல் பயணம் அல்லது உரிமைப் போராட்டம் பல தடைகளைக் கடந்து தான் அதன் இலக்கை அடை யும்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம் பெறவுள்ள தேர்தலில் எமது கட்சி அதிக ஆசனங்களை பெறுவதற்கு மக்கள் வாக்களித்து ஆதரவ அளிக்க வேண்டும் என தெரிவித்தார். (நி-6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் அட்டை விநியோகம் ஆரம்பம்

(கொழும்பு)

**2024 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகத்திற்கான விசேட தினங்களாக ஒக்டோபர் 27 மற்றும் நவம்பர் 3 ஆம் திகதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது என தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.**



ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை தபால் நிலையத்திற்கு வழங்கப்படும்.

நாடளாவிய ரீதியில் உள்ள மாவட்டச் செயலாளர் அலுவலகங்களில் பொதுத்தேர்தல் தொடர்பான தபால் மூல வாக்காளர் அட்டைகளை வழங்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

தபால் மூல வாக்காளர் விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை 759,210 ஆகும். அவற்றில் 21,160 நிராகரிக்கப்பட்டன.

இதன்படி 738,050 பேருக்கு தபால் மூல வாக்களிப்பிற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இது கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது என குறிப்பிட்டுள்ளார். (ரி-8)

## ஹெரோயின் கடத்தியதற்காக 10 வெளிநாட்டவர்களுக்கு மரணதண்டனை!

### விதித்தது நீர்கொழும்பு மேல் நீதிமன்றம்

(கொழும்பு)

10 வெளிநாட்டவர்களுக்கு நீர்கொழும்பு மேல் நீதி மன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

2016 ஆம் ஆண்டு 146 கிலோகிராம் ஹெரோயின் வைத்திருந்தமை மற்றும் கடத்தியதற்காக இந்த 10 வெளிநாட்டவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டிருந்தது.

அதன்படி 9 ஈரானியர்கள் மற்றும் ஒரு பாகிஸ்தானியருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-8)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு : 0091956615 6719
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974
(411)

பாராளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சுயேட்சைக் குழு - 12



X 2
N.P. ஸ்ரீந்திரன் B.A.(Hons)
M.A, Dip.in.Edu,
Dip.in.Public Law,
Saivappulavar.
முதன்மை வேட்பாளர்
வெல்லும் சைவத் தமிழ்த்தேசியம்
நாளை நமதே...!

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 42<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: HND in Agriculture, BSc, Agriculture Officer<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/14870 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 27 1/4<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: உள்நாடு சொந்த தொழில்<br>தொ.இ: G/14789 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>10 இல் சூரி செவ்<br>உயரம்: 6'3"<br>தகைமை/தொழில்: A/L, Area Sales Manager<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/14875 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 18<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: Bsc, MBA, Consultant (pvt)<br>எதிர்பார்ப்பு: Graduate, சைவபோசனம்<br>தொ.இ: G/14793 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L. தனியார் வேலை<br>எதிர்பார்ப்பு: அரசாங்க உத்தியோகம்<br>தொ.இ: B/14878 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>7 இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Civil Engineer, Draftsman<br>எதிர் பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14800 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# உக்ரைன் மோதலை தீர்க்க

# அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு

## புடினிடம் மோடி தெரிவிப்பு





(மொஸ்கோ)

**உக்ரைன் மோதலுக்கு அமைதியான முறையில் தீர்வு காண அனைத்து ஒத்துழைப்பையும் வழங்க இந்தியா விருப்பம் கொண்டுள்ளதாக இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்தார்.**

பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட மோடி ரஷ்ய ஜனாதிபதியை சந்தித்த போது இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களில் ரஷ்யாவிற்கு மேற்கொண்ட இரண்டு பயணங்களையும் நினைவு கூர்ந்த பிரதமர் மோடி, அவை எங்களின் நெருங்கிய ஒருங்கிணைப்பு மற்றும் ஆழமான நட்பை பிரதிபலிக்கின்றன என்றும் தெரிவித்தார்.

புடினைத் தவிர இந்தியப் பிரதமர், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கைச் சந்திப்பார் என்றும், மற்ற பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்யா-உக்ரைன் போர் மற்றும் மத்திய கிழக்கு நெருக்கடி உள்ளிட்ட உலகளாவிய அமைதியின்மையை அடுத்து இந்த உச்சி மாநாடு நடைபெறுகிறது.

மூன்று நாள் பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் 22 உயர்மட்ட நாடுகள் உட்பட 36 நாடு களின் அதிகாரிகள் மற்றும் ஆறு சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

பன்முகத்தன்மையை வலுப்படுத்துதல், புதிய உறுப்பினர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் பிராந்திய சவால்களை எதிர்கொள்வது பற்றிய விவாதங்கள் தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்படவுள்ளன.

இந்த மாநாட்டுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தலைமை தாங்குகிறார்.

இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா, எகிப்து மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் உச்சிமாநாட்டின் போது, புடின் இருதரப்பு பேச்சு வார்த்தைகளை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உச்சிமாநாட்டின் இறுதி நாளில் துருக்கி மற்றும் ஈரானைச் சேர்ந்த தனது சகாக்களையும் புடின் சந்திக்கவுள்ளார்.

உச்சிமாநாட்டின் முடிவில் பிரிக்ஸ் நாடுகளின் தலைவர்கள் ஒரு கூட்டு பிரகடனத்தை ஒப்புக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக ரஷ்ய ஊடகமான ஸ்புட்னிக் தெரிவித்துள்ளது. (நி-8)

## தீவிர புயலாக வலுப்பெறும் 'டானா புயல்'



(டில்லி)

தமிழகத்தில் வட கிழக்கு பருவமழை கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமாகி தற்போது, தமிழகத்தில் உள் மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை தீவிரமாக இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன்காரணமாக, அனேக இடங்களில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது.

இதற்கிடையே வடக்கு அந்தமான் கடல் பகுதியில் நிலவிய வளி மண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, மத்திய கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு அந்தமான் கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத் தத் தாழ்வு பகுதி உருவானது.

இந்தநிலையில் காற்றழுத்தத் தாழ்வு பகுதி மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப் பெற்றுள்ளது. தொடர்ந்து காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் வலுவாகி டானா புயலாக உரு வெடுத்துள்ளது.

டானா புயல் வட மேற்கு வங்கக்கடலில் தீவிர புயலாக வலுப் பெறும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. (நி-8)

## கமலா ஹாரி

## நன்கொடை அளித்த பி



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் கமலா ஹாரிசுக்கு தொழிலதிபர் பில்கேட்ஸ் ஆதரவு தெரிவித்துள்ளார். அவர் கமலாவுக்கு 50 மில்லியன் டொலர் நன்கொடை அளித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 5 இல் நடைபெற உள்ளது. ஜனநாயக கட்சி சார்பில் துணை ஜனாதிபதி கமலா ஹாரிசும், குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பும் களமிறங்கி உள்ளனர். கருத்துக் கணிப்புகளில் கமலா ஹாரிசுக்கு, அதிக செல்வாக்கு இருப்பது தெரியவந்துள்ளது.

தேர்தலுக்கு இன்னும் இரண்டு வாரங்களே உள்ள நிலையில், கமலா ஹாரிசும், ட்ரம்பும் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடும் கமலா ஹாரிசுக்கு தொழிலதிபர் பில்கேட்ஸ் ஆதரவு தெரிவித்துள்ளார். அவர் கமலாவுக்கு 50 மில்லியன் டொலர் நன்கொடை அளித்துள்ளார்.

ஆசிய- அமெரிக்கர்கள் மத்தியில் ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவு அதிகம் தென்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


வெளிநாடு

# ஹிஸ்புல்லாவின் புதிய தலைவர் சபிதீனும் கொல்லப்பட்டார்!

## உறுதிப்படுத்திய இஸ்ரேல்

(காசா)

**ஹிஸ்புல்லா இயக்கத்தின் புதிய தலைவர் சபிதீனும் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.**



இஸ்ரேல் -காசாவின் ஹமாஸ் அமைப்பு இடையேயான போரில் லெபனானில் செயற்படும் ஹிஸ்புல்லா இயக்கம் ஹமாசுக்கு ஆதரவாக உள்ளது. அந்த இயக்கம் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துகிறது.

இதையடுத்து லெபனான் மீதும் இஸ்ரேல் தீவிரமாக தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் ஹிஸ்புல்லா இயக்கத்தின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டார். மேலும் அந்த இயக்கத்தின் முக்கிய தளபதிகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

நஸ்ரல்லா கொல்லப்பட்டதையடுத்து ஹிஸ்புல்லா இயக்கத்தின் புதிய தலைவராக அவரது உறவினர் ஹஷேம் சபிதீன் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையே சபிதீனும் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகி இருந்தது.

இந்த நிலையில் ஹிஸ்புல்லா இயக்கத்தின் புதிய தலைவர் சபிதீனும் கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.


இது தொடர்பாக இஸ்ரேல் இராணுவம் கூறும்போது, 3 வாரங்களுக்கு முன்பு நடந்த தாக்குதலில், ஹிஸ்புல்லாவின் நிர்வாகக் குழுத் தலைவர் ஹஷேம் சபிதீன், ஹிஸ்புல்லா புலனாய்வு இயக்குநரகத்தின் தலைவர் அலி ஹுசைன் ஹசிமா ஆகியோர் ஹிஸ்புல்லா தளபதிகளுடன் கொல்லப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்து உள்ளது.

கடந்த 8 ஆம் திகதி இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறும்போது, ஹிஸ்புல்லாவின் அடுத்த கட்ட தலைவர்களும் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்து இருந்தார்.

ஆனால் ஹஷேம் சபிதீன் பெயரை குறிப்பிடவில்லை. தற்போது ஹஷேம் சபிதீன் கொல்லப்பட்டதை இராணுவம் உறுதிப்படுத்தி இருக்கிறது. ஆனால் இதை ஹிஸ்புல்லா இயக்கம் இன்னும் உறுதி செய்யவில்லை.

இதற்கிடையே லெபனானில் கடந்த செப்ரெம்பர் 23 ஆம் திகதி இஸ்ரேல் தொடங்கிய தாக்குதலில் இதுவரை பலியானவர்களின் எண்ணிக்கை 1550 ஆக அதிகரித்துள்ளது. (நி-8)

## ...ரிஸிற்கு ...த பில்கேட்ஸ்



இவர்களில் 46 சதவீதம் பேர் பைடனுக்கு ஓட்டளிக்க விருப்பம் தெரிவித்தனர்.

அவர் தேர்தல் களத்தில் இருந்து விலகி, கமலா ஹாரிஸ் களம் இறங்கிய நிலை யில், அவருக்கு ஓட்டளிக்க விரும்புவோர் சதவீதம் 64 ஆக அதிகரித்துள்ளது என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. (நி-8)

## மலேரியா இல்லாத நாடுகளில் இடம்பிடித்த எகிப்து

(ஜெனீவா)

உலக சுகாதார நிறுவனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை எகிப்தை மலேரியா இல்லாத நாடு என்று சான்றளித்துள்ளது.


இது பண்டைய காலங்களிலிருந்து நாட்டில் இருந்த ஒரு நோயை நீக்குவதைக் குறிக்கிறது.

அனோபிலிஸ் நுளம்புகளால் உள்நாட்டு மலேரியா பரவும் சங்கிலி குறைந்தது முந்தைய மூன்று வருடங்களாக தடைப்பட்டுள்ளது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்ட நாடுகளுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் சான்றிதழை வழங்குகிறது.

உலகளவில் மொத்தம் 44 நாடுகளுக்கும் ஒரு பிரதேசத்திற்கும் இந்த அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. (நி-8)



## பெய்ரூட்டில் இஸ்ரேல் விமானத்தாக்குதல்
### 13 பேர் உயிரிழப்பு 57 பேர் காயம்



(பெய்ரூட்)

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் மருத்துவமனையொன்றிற்கு அருகில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 57 பேர் காயமடைந்துள்ளனர்.

ரபிக் ஹரீரி பல்கலைகழக மருத்துவமனையின் வாகனத்தரிப்பிடத்தின் மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளது.


இஸ்ரேலின் விமான தாக்குதலை தொடர்ந்து இடிபாடுகளிற்குள் சிக்குண்டுள்ளவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்றன,

முன்னெச்சரிக்கை இன்றி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மூன்று கட்டடங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன பல கட்டடங்கள் பெரும் சேதத்தை சந்தித்துள்ளன.

இடிபாடுகளின் கீழ் எத்தனை பேர் சிக்குண்டுள்ளனர் என்பது தெரிய வில்லை என மீட்புப் பணியாளர் தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோள இறக்குமதியை குறைக்க அறிவுறுத்து



(கொழும்பு)

இலங்கைக்கான சோள இறக்குமதி குறித்து விவசாய அமைச்சு முக்கிய அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

அதன்படி, அடுத்த வருடம் சோள இறக்குமதியை 150,000 மெற்றிக் தொன்களாக குறைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் எம்.பி.என்.எம் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது வருடாந்தம் சுமார் 300,000 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்வதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

சோள இறக்குமதிக்காக செலவிடப்படும் கணிசமான அந்நியச் செலாவணியை வெளியேற்றுவதைக் குறைக்கும் நோக்கில் இறக்குமதியை குறைக்கவுள்ளதாக அவர் விளக்கமளித்தார்.

தற்போதைய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த ஆண்டு சோள சாகுபடிக்கு பயன்படுத்தப்படும் நிலத்தை அதிகரித்துள்ளோம்.

அதன்படி, நாட்டிலிருந்து அந்நியச் செலாவணி வெளியேறுவதைக் குறைக்க இது உதவும் என சுட்டிக்காட்டினார்.

வெளிநாடுகளில் இருந்து விதைகளை இறக்குமதி செய்யாமல் உள்நாட்டிலேயே தேவையான விதைகளை உற்பத்தி செய்யும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் விக்ரமசிங்க தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## மசகு எண்ணையின் விலையில் மாற்றம்

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணையின் விலை நேற்று சற்று அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 72.09 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 76.04 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 2.29 அமெரிக்க டொலராக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 220 | 200-300 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 300 |
| தக்காளி | 350 | 280 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 130-180 | 150 |
| கோவா | 250 | 320 | 250 |
| கரட் | 200 | 260 | 200 |
| பூசணி | 100 | 80 | 120 |
| புடோல் | 180 | 200 | 300 |
| வாழைக்காய் | 120 | 80-120 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 280 | 350 |
| பாகற்காய் | 600 | 400 | 400 |
| வெண்டக்காய் | 200 | 130 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 120 | 200 |
| பயற்றங்காய் | 220 | 200-250 | 300 |
| லீக்ஸ் | 300 | 360 | 300 |
| பீற்றூட் | 120 | 130 | 200 |
| கறிமிளகாய் | 550 | 420 | 600 |
| முருங்கைக்காய் | 200 | 100-120 | 400 |
| போஞ்சி | 450 | 300 | 600 |
| கத்தரிதம்புள்ள | 120 | -- | 220 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 150 |
| தேசிக்காய் | 400 | 350-400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 80-150 | 120-170 |
| இராசவள்ளி | 900 | 600 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 70 | 100 | 80 |
| வல்லாரை | 35 | 100 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 200 |

# இன்று ஒரு தகவல் 249

தென்கச்சி.கோ.சுவாமிநாதன்



## இருவகை மன்னர்கள்

இந்த உலகத்திலே எத்தனையோ ராஜாக்கள் வந்திருக்கிறார்கள், போயிருக்கிறார்கள். சில பேர் மிகவும் கெட்டிக்காரர்களாகவும் இருந்திருக்கிறார்கள், சிலபேர் விவரம் தெரியாதவர்களாகவும் இருந்து இருக்கிறார்கள்.

அரசன் எவ்வழி அவ்வழி குடிகள் என்பார்கள். அதனாலே அரசன் நல்லவனாக இருந்தால் மக்களும் நல்லவிதமாக இருப்பார்கள்.

ஒரு ராஜா இருந்தார். அவரும் அவருடன் இன்னொருவரும் குதிரை மேலே ஏறி நாட்டின் எல்லைப்புறத்தை சுற்றிப் பார்த்துவிட்டு வருவோம் என்று புறப்பட்டார்கள்.

குதிரைகள் களைத்துப் போய்விட்டது. அதனாலே ஒரு குளத்து ஓரமாக நிறுத்தி அதற்கெல்லாம் தண்ணீர் காட்டினார்கள்.

அந்தக் குளத்து ஓரமாக ஒரு குடிசை இருந்தது. அந்த குடிசைக்குள்ளே ஒரு பெண் அழுகின்ற சத்தம். உள்ளே போய்ப் பார்த்தால் அந்தப் பெண் தூக்குமாட்டிக் கொள்ள கயிற்றை கட்டிக் கொண்டு இருந்திருக்கிறாள். ராஜா கூட இருந்தவர் உடனே ஓடிப்போய் அந்தக் கயிற்றை வெட்டிவிட்டார். "ஏனம்மா இப்படி ஒரு முடிவிற்கு வந்தாய்?" என்று கேட்டிருக்கிறார்!

"என் மானத்தை காப்பாற்றிக் கொள்வதற்குத்தான் இப்படி செய்தேன்!" என்று சொன்னாள் அந்தப் பெண்! உனக்கு அப்படி ஒரு நிலைமை வராதம்மா! ஏன் என்றால் இப்போது இருக்கின்ற நமது ராஜா நல்லவர். அது மட்டுமில்லை மிகவும் திறமையான ஒருவர் எங்கள் நாட்டுப் படைகளுக்கு தளபதியாக இருக்கின்றார். அதனால் உனக்கு ஒரு கஷ்டமும் வராதம்மா! தைரியமாக இரு என்றார்.

அப்படி இல்லை எனக்கு கஷ்டம் கொடுக்கிறதே நீங்கள் சொல்கின்ற அந்தத் தளபதி தான் என்றாள் அந்தப் பெண். இதை அந்த ராஜா குடிசைக்கு வெளியில் நின்று கேட்டுக் கொண்டிருந்தார். மறுநாள் கையும் களவுமாக அந்தத் தளபதியைப் பிடித்தார். கோபமாகப் பார்த்தார்.

தளபதியே என்னுடைய ஆட்சியிலே என்னுடைய அதிகாரிகளே இப்படி நடந்து கொள்வதை என்னால் சகிக்க முடியாது. இந்த நிமிடமே உன்னை வேலையிலிருந்து நீக்குகின்றேன். இந்த நாட்டின் எல்லைக்குள்ளே நீ இருக்கவே கூடாது. உடனே வெளியேறு என்று உத்தரவு போட்டார்.

உடனே பக்கத்திலிருந்தவர் ராஜாவைப் பார்த்து சொன்னார். மன்னா! இந்தத் தளபதி மிகவும் திறமையானவர். அப்படிப்பட்ட ஒருவரை நாம் இழப்பது நல்லதில்லை. கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் என்றார்.

அதற்கு அந்த ராஜா என்ன சொன்னார் தெரியுமா? நீ சொல்வது சரி தான் இருந்தாலும் ஒரு நல்ல தளபதியை நாம் இழந்து விட்டால் வேறு ஒரு நல்ல தளபதியை நாம் கண்டுபிடித்து விடலாம். ஆனால் ஒரு பெண்ணிற்கு அநீதி நடந்து விட்டால் அதற்குப்பின் எங்கள் புகழ் என்னத்திற்கு ஆகும் என்றார்.

அப்படி சொன்ன அந்த ராஜா யார் என்ற நினைக்கின்றீர்கள். வீர சிவாஜி தான் அப்படிச் சொன்னார். இப்படிப்பட்ட மன்னர்களும் இந்த உலகத்திலே இருந்திருக்கின்றார்கள்.

இதற்கு நேர்மாறான மன்னர்களைப் பற்றியும் சுவாரஸ்யமான சில கதைகள் உண்டு. அப்படித் தான் ஒரு ராஜா இருந்தார். அவருக்கு சொந்தமாக யோசிக்கின்ற திறமை மிகவும் குறைவு. அவர் காலிலே அக்கி வந்துவிட்டது. கடி படை என்று சொல்வார்களே அது மாதிரி. மிகவும் தொந்தரவாக இருந்தது.

உடனே அரண்மனை வைத்தியரைக் கூப்பிட்டார். அதற்கு என்ன செய்யலாம் என்று யோசனை கேட்டார். இது என்ன பெரிய காயம்? பொடுதலையை வைத்துக் கட்டினால் சரியாகிவிடும் என்றார் வைத்தியர்.

அப்படி சொல்லிவிட்டு அவர் போய்விட்டார். அது ஒரு பச்சிலை. வைத்தியர் போனதற்குப்பின் ராஜாவிற்கு ஒரு சந்தேகம் வந்தது. அது சரி இந்த வைத்தியர் பொடுதலை என்று சொன்னாரே அப்படி என்றால் என்ன? என்று. அது ஒரு பச்சிலை என்பது அவருக்குப் புரியவில்லை.

உடனே ஒரு புலவரை கூப்பிட்டார் ராஜா. அவரிடம் பொடுதலை என்றால் என்ன என்று கேட்டார். அவர் யோசித்துப் பார்த்தார். பொடுதலை என்றால் முடி இல்லாத தலை என்று விளக்கம் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்.

உடனே ராஜா தளபதியைக் கூப்பிட்டார். எங்கள் நாட்டிலே சுத்தமாக முடி இல்லாத ஒருவனைப் பார்த்து கூட்டிவா என்று உத்தரவிட்டார். அப்பாவியாக ஒருவன் கிடைத்தான். அழைத்துக் கொண்டு வந்தார்கள். என்னை எதற்கு அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போகின்றீர்கள் என்று கேட்டான் அந்த ஆள்.

ராஜாவிற்கு காலிலே அக்கி. அதற்கு பொடுதலையை வைத்து கட்ட வேண்டும் என்று அரண்மனை வைத்தியர் சொல்லிவிட்டார். அது தான் உன்னை அழைத்துக் கொண்டு போகின்றோம் . உன் தலையைத் தான் வைத்துக் கட்டப் போகின்றோம் என்று சொன்னான் அரண்மனை சேவகன்.

அந்த ஆளிற்கு திடீர் அதிர்ச்சி. அதற்குப்பின் மெதுவாக சமாளித்துக் கொண்டு அது சரிங்க இந்த யோசனையைச் சொன்ன அரண்மனை வைத்தியர் வீடு எங்கேயிருக்கு? என்று கேட்டான்.

அதோ தெரியுது பார்! என்று வீட்டைக் காட்டினார்கள். உடனே அந்த ஆள் வீடு இருக்கும் திசையைப் பார்த்து சாஷ்டாங்கமாக கீழே விழுந்து நமஸ்காரம் செய்தான். அங்கேயிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் இவ்வாறு செய்கின்றாய் என்று கேட்டார்கள்.

அதற்கு அந்த ஆள் இன்றைக்கு இப்போது நான் உயிருடன் இருப்பதற்கு அந்த வைத்தியர் தான் காரணம் அது தான் கும்பிட்டேன் என்றான். எப்படி என்று கேட்டார்கள். நல்லவேளை அந்த வைத்தியர் ராஜாவிடம் பொடுதலையை வைத்துக் கட்டுங்கள் என்று மட்டும் தான் சொன்னார். பொடு தலையை நசுக்கி வைத்து கட்டுங்கள் என்று சொல்லியிருந்தால் என் கதி என்ன ஆகிறது என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிஸ் தூதரக குழுவினர் மன்னாரிற்கு விஜயம்



(மன்னார்)


சுவிஸ் தூதரக அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் ஜஸ்டின் கொய்லட் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் மன்னாரிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த குழுவினர் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் போது மன்னார் மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள்,பொருளாதாரம், தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டதாக சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தெரிவித்தார்.

இதன்போது தற்போதைய ஜனாதிபதியின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய பொறுப்பு கூறல்கள் குறித்தும் வலியுறுத்தப்பட்டது. மேலும் சிவில் சமூக அமைப் புகளின் செயற்பாடுகள் மற்றும் அவர்களின் நிலைப் பாடுகள் குறித்தும் விரிவாக கலந் துரையாடப்பட்டது. (6-8-285)

# நுளம்பு பெருகும் வகையில் கிளி.பேருந்து நிலையம்



(தருமபுரம்)

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள மத்திய பேருந்து நிலையம் நுளம்பு பெருகும் வகையில் காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் வெளியிட்டனர்.

பேருந்து நிலைய வளாகத்தை சூழவுள்ள பகுதியில் மழைநீர் தேங்கி நிற்பதுடன் பிளாஸ்டிக் கழிவுகளும் காணப்படுவதனால் நுளம்பு பெருகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நாளாந்தம் குறித்த பேருந்து நிலைய தரிப்பிடத்திற்கு வரும் பயணிகள் மற்றும் பொதுமக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (6-8-316)

# வவுனியா வடக்கு பிரதேச பண்பாட்டு விழா



(வவுனியா)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா வடக்கு பிரதேச செயலகமும், பண்பாட்டு பேரவையும் இணைந்து ஒழுங்கு செய்த பிரதேச பண்பாட்டு விழா நேற்று வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மாவட்ட செயலாளர் பி.ஏ.சரத்சந்ர சிறப்பு விருந்தினராக மேலதிக மாவட்ட செயலாளர் தி.திரேஸ் குமார் ஆகியோர் பங்கேற்றதோடு விழாவில் மூத்த கலைஞர்களை விருது வழங்கி கௌரவித்தனர்.

மேலும் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நஞ்சற்ற உணவுப் பொருட்களுக்கான விற்பனை சந்தை நிகழ்வும் இடம்பெற்றது. (6-8)

# பொது இடங்களில் வீசப்பட்ட மாட்டிறைச்சி கழிவுகள்

(தருமபுரம்)

திருடிய பசு மாடொன்றின் இறைச்சியை எடுத்து விட்டு ஏனைய பாகங்களை கிணறு மற்றும் பொது இடங்களில் வீசி விட்டு சென்றுள்ள சம்பவம் கிளிநொச்சி பரந்தன் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

புரந்தன் முல்லை வீதியில் உள்ள 11 ஆம் ஒழுங்கையில் உள்ள வீட்டில் கட்டி வைக் கப்பட்டிருந்த பசு மாட்டை கடத்திச் சென்று பரந்தன் முல்லைவீதி அருகில் மாட்டை இறைச்சிக்காக வெட்டப்பட்டு கழிவுகளை கிணறு மற்றும் பொது இடங்களில் வீசி சென்றுள்ளார்கள். இவ் விடயம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-8-316)

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2025 ஆம் ஆண்டு குத்தகை மீள்கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்ற அதிகார எல்லைக்குட்பட்ட கீழ் குறிப்பிடப்படுகின்ற பொதுச்சந்தை (மீன்சந்தை, வாகனத்தரிப்பிடம் உள்ளடங்கலாக ) மற்றும் இறைச்சிக் கடைகளை 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி கோரப்படுகின்றது.

01. குத்தகைக்கான கேள்விப் பத்திரங்களை கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணம், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி நகராட்சி மன்ற அலுவலகத்தில் 2024.10.24 ஆம் திகதி தொடக்கம் 2024.11.06 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப 9.30 - பி.ப 2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர் தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கிராமசேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

    **கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி :- 07.11.2024 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.00 மணி**

    **கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி 07.11.2024 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.00 மணி**

02. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு தனித்தனியாக மூலப்பிரதி, இணைப்பிரதி என இரு உறைகளில் வைத்து செயலாளர், நகராட்சி மன்றம்,சாவகச்சேரி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

    07.11.2024 முற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது

03. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக பட்டியலிடப்பட்டவர்களுக்கு கேள்விப் படிவம் வழங்கப்படமாட்டாது என்பதுடன் படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
05. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
06. கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
07. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத்திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் 1/3 பகுதி வைப்புத் தொகையினை செலுத்தி சபையுடன் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.
08. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**2025 ஆம் ஆண்டு பொதுச்சந்தை (மீன்சந்தை, வாகனத்தரிப்பிடம் உள்ளடங்கலாக ) இறைச்சிக்கடைகளின் மீள்கேள்விக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகை விபரம் (01.01.2025-31.12.2025) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | சாவகச்சேரி பொதுச் சந்தை (மீன்சந்தை, வாகனத்தரிப்பிடம் உள்ளடங்கலாக) | 16,860,690.00 | 168,650.00 | 2,000.00 |
| 02 | ஆட்டிறைச்சிக் கடை இல:01 | 455,555.00 | 5000.00 | 2,000.00 |
| 03 | மாட்டிறைச்சிக் கடை இல:01 | 1,571,000.00 | 15,750.00 | 2,000.00 |
| 04 | மாட்டிறைச்சிக் கடை இல:02 | 1,571,000.00 | 15,750.00 | 2,000.00 |
| 05 | கோழி இறைச்சிக் கடை இல:02 | 1,645,600.00 | 17,000.00 | 2,000.00 |

❖ குறிப்பு - இந்நகராட்சி மன்றத்தின் பொதுச் சந்தை, இறைச்சிக்கடை, கருவாட்டுக் கடையிலிருந்து 1/2Km சுற்று வட்டத்திற்குள் தனியார் எவரும் மரக்கறி, இறைச்சி, கருவாடு என்பன விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

❖ உற்பத்தியாளர்களினால் சந்தைக்கு கொண்டு வரப்படும் விவசாய உற்பத்திப்பொருட்களுக்கு 10% கழிவு நடைமுறையினை பின்பற்ற முடியாது.

**செயலாளர்,**
**நகராட்சி மன்றம்**
**சாவகச்சேரி**
**2024.10.24**

(சி-1441)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 614





இந்தப் பெண்ணுக்கும் மூர்ச்சை தெளிந்து சுயநினைவு வந்து கொண்டிருக்கிறது கண்ணிமைகள் அசைகின்றன. வேறு ஏதேனும் சொல்வதற்கு இல்லையா? ஈழநாட்டில் இன்னும் பல அபாயங்களுக்கு நீங்கள் உள்ளானதாகச் சொன்னீர் அல்லவா! அதைச் சொல்லுங்கள்".

"ஆம்! இளவரசி! இலங்கைச் சிம்மாசனத்தையும் மணி மகுடத்தையும் இளவரசர் மறுத்துவிட்டு வந்த அன்று நாங்கள் அநுராதபுரத்தின் வீதிகளில் வந்து கொண்டிருந்தபோது, திடீரென்று ஒரு கட்டடத்தின் முன்பகுதி இடிந்து விழுந்தது. ஒரு கணநேரம் நாங்கள் அங்கே தாமதித்திருந்தால் எங்கள் தலையில் விழுந்திருக்கும். உயிரோடு சமாதி ஆகியிருப்போம். அச்சமயத்தில் ஒரு பெண்மணி திடீரென்று அங்கே தோன்றினாள். சமிக்ஞை செய்து இளவரசரை அழைத்தாள்." "கடவுளே! அங்கேயும் ஒரு பெண் தானா உங்களைக் காப்பற்றுவதற்கு? அந்தப் பெண் யார்?"

"அவள் யாரோ எனக்குத் தெரியாது. ஆனால் இளவரசருக்கு முன்னால் பழக்கமுள்ளவளாகத் தோன்றியது. வீண் சந்தேகத்துக்கு ஆளாக வேண்டாம். அம்மணி! அந்த அம்மாள் பிராயம் முதிர்ந்தவள்"

"எவ்வளவு பிராயம் இருக்கும்?" "இளவரசரின் அன்னையாக இருக்கக் கூடியவள். அதோடு காது செவிடு, வாயும் ஊமை!" "என்ன? என்ன இன்னொருதரம் சொல்லுங்கள்!"

"பிறவிச் செவிடும் ஊமையுமான ஒரு மூதாட்டி அவள் பிராயம் நாற்பத்தைந்துக்கு மேல் இருக்கும்"

"ஐயா! அப்படி ஒரு மூதாட்டியை ஈழநாட்டில் பார்த்தீரா? அவளைப் பற்றி மேலும் சொல்லுங்கள். அவளுடைய பிறப்பு வளர்ப்பைப் பற்றி ஒன்றும் தெரியாதா? அவள் எங்கே பிறந்தவள்". "ஈழநாட்டை அடுத்துக் கடலில் ஒரு தீவில் பிறந் தவள்."

இளவரசி குந்தவைதேவி அளவில்லாத பரபரப்பை அடைந்து "ஐயா! இன்னும் சொல்லுங்கள்! பார்ப்பதற்கு அவள் எப்படியிருக்கிறாள்?" என்றாள். "அம்மணி! அவளுடைய தோற்றத்தில் ஓர் அதிசயத்தைக் கண்டேன். அதைச் சொல்வதற்கே எனக்குத் தயக்கமாயிருக்கிறது."

"தயக்கம் வேண்டாம்! சீக்கிரம் சொல்லுங்கள்." "சோழ நாட்டில் நான் பார்த்த ஒரு பெண்ணைப் போலவே அவள் இருந்தாள் வயது மட்டுந்தான் அதிகம். ஆடை, ஆபரணங்கள் பூணாமல் தலை விரிகோலமாயிருந்தாள். மற்றபடி அதே முகம், அதே தோற்றம். உண்மையில் நான் ஒரு நிமிடம் ஏமாந்து போய் விட்டேன்."

"ஐயா, அப்படிப்பட்ட பெண் இங்கே உள்ளவள் யார்?" "இளவரசி! தங்களால் ஊகித்துத் தெரிந்து கொள்ள முடியவில்லையா?" "நானா? இந்தப் பெண் வானதியா? தஞ்சை அரண்மனையில் உள்ள என்னுடைய அன்னை யரா?" "நீங்கள் குறிப்பிட்ட யாரும் இல்லை."

"பழுவூர் இளையராணி நந்தினியா?" "ஆம், நந்தினிதான்!" "கடவுளே! அப்படியானால், நான் சந்தேகித்தது உண்மை தான்." "என்ன சந்தேகித்தீர்கள்?"


"விஷ நாகத்தைவிடக் கொடியவள் என்று எண்ணி நான் வெறுத்தவள் உண்மையில் என் தமக்கையாக இருக்கலாமோ என்று சந்தேகித்தேன். அது நிஜமென்று தாங்கள் சொல்வதிலிருந்து தெரிந்தது. விதியின் கொடுமையே கொடுமை. இதிலிருந்து குலம், கோத்திரம் தெரியாத ஒரு பெண்ணை அரச குலத்தைச் சேர்ந்தவர் மணப்பது எவ்வளவு பிசகு என்று தெரிகிறது."

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# பொது அறிவு

- ஞாபக சக்தி கூடிய மிருகம்?
  யானை



- ஆகாயத்தோட்டி எனப்படுவது?
  காகம்



- அதிக காலம் வாழும் உயிரினம்?
  ஆமை




- கடல் நீரைப் பருகுவது?
  பெண்குயின்



- கண்களைத் திறந்திறந்தபடி தூங்குவது?
  மீன்கள்

- கப்பல்கள் கரையை அடைய உதவுவது?
  கலங்கரை விளக்கு



- ஈ முட்டையின் நிறம்?
  வெள்ளை

- சூழல் நேயத்திரவம்?
  வேப்பெண்ணெய்

சு.சுபாநனராஜன், தரம்- 2
யா/புனித ஜோன்
பொஸ்கோ வித்தியாலயம்.

## உங்களுக்குத் தெரியுமா?



எறும்புகளுக்கு காதுகளும் மூக்குகளும் இல்லை.

அவை ஒரு வித இரசாயனங்களை உமிழ்வதன் மூலம் தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றன.

உணர்கொம்புகளின் மூலமாக உணவினை அறிந்து கொள்கிறது.

எறும்பின் இரத்தம் நிறமற்றவை.

## பாடல்

சின்னப்பிள்ளைகளே
செல்லப்பிள்ளைகளே
சிரிக்கும் நல்ல மலர்கள் போன்ற
சின்னப் பிள்ளைகளே!

பள்ளிக்கூடம் செல்ல வேண்டும்
தம்பி தங்கைகளே
பாடம் நன்றாய்ப் படிக்க வேண்டும்
பாலர் நீங்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் எண்ணங்களின் பிரதிபலிப்பே செயல்களாகவும் மற்றும் வாழ்வின் அனுபவங்களாகவும் மாறுகின்றன. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எல்லோர் முகத்திலும் கரியைப் பூசிவிட்டால்...

பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரம் நாடு பூராகவும் நடந்தாகிறது. தென்பகுதியைப் பொறுத்தவரை மாற்றம் என்பது அவர்களின் தொனிப்பொருளாக இருக்கிறது.

அதேநேரம் மாற்றத்தை முறியடிப்பதற்காக தேசிய மக்கள் சக்திக்கு எதிராக ஏனைய அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து வியூகம் அமைத்து நிற்கின்றன.

இவையொரு புறமிருக்க, எமது தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கைப் பொறுத்தவரை அதிகளவான கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் தேர்தல் களத்தில் குதித்திருப்பதன் காரணமாக, யாருக்கு வாக்களிப்பதென்று தெரியாமல் மக்கள் மௌனமாக இருக்கின்றனர்.

சிலவேளைகளில் தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதை நம் தமிழ் மக்கள் தவிர்த்து விடுவார்களோ என்ற அச்சம்கூட உண்டு.

இவ்வாறு ஏகப்பட்ட கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் தேர்தல் களத்தில் நிற்பதற்குக் காரணம் நம் தமிழ் மக்கள் மத்தியில் வலுவான அரசியல் கட்சிகளும் வலுவான பொது அமைப்புகளும் இல்லாமல் போனமைதான் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

பொதுவில் பலமான அரசியல் கட்சிகள் இருக்குமாயின், அவை அந்த இனக் குழுமத்தில் இருக்கக்கூடிய மக்கள் செல்வாக்கை உடையவர்களை இனங்கண்டு அவர்களைத் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்துவர்.

ஆனால் சமகாலத்தில் அத்தகைய நிலைமை இல்லாமல் போயிற்று.

மாறாக, கணிசமான தமிழ் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் வேட்பாளர் பட்டியலை முழுமைப்படுத்துவதற்காக வேட்பாளர்களைத் தேடிப் பிடிப்பதற்குப் பெரும் பாடுபட்டதான தகவல்களும் உண்டு.

இங்குதான் தேர்தலில் போட்டியிடுவதற்கு மக்கள் சமூகத்தில் இருக்கக்கூடிய சான்றாண்மைமிக்கவர்கள் மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு தேர்தல் என்றதும் ஐயா! வேண்டாம் என்று அவர்கள் கூறுவதற்கு மூலகாரணம்; யார், எவர் என்ற எந்தவிதமான ஏற்ற இறக்கமுமின்றி, அனைவரது முகத்திலும் சமூக வலைத்தளங்கள் மூலமாகக் கரி பூசுகின்ற காரியம் சர்வசாதாரணமாக நடப்பதாகும்.

இதனாலேயே நல்லவர்கள், பெரியவர்கள் ஒதுங்கிக் கொள்கின்றனர்.

பரவாயில்லை. எல்லோர் முகத்திலும் கரி பூசுகின்ற இந்தக் கலாசாரம் நீடிக்குமாயின், நிலைமை மிகவும் மோசமாகும்.

உண்மை. அதர்மத்தின் அடையாளமாக இருக்கின்ற கௌரவர் சேனை அழிய வேண்டுமாயின், தருமர்கள் வாழ வேண்டும். தருமர்களை அழித்து விட்டால், கௌரவர்களே எஞ்சுவர். இந்த உண்மையை எவரும் மறந்து விடக் கூடாது.

# ஜனாதிபதியின் ஆட்சியை கண்டறிய ஒரு வருடமாவது வேண்டும்

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தற்போதைய அரசாங்கம், தமது உண்மைத் தன்மையை வெளிப்படுத்த வேண்டுமானால், குறைந்தது ஒரு வருடமாவது சுதந்திரமாக ஆட்சி செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், அதற்கு முன்னர் அரசாங்கத்தை கைப்பற்றுவதற்கு எவரும் அவசரப்பட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

பதவிக்கு வந்த வெறும் 24 நாட்களுக்குள் 60 பில்லியன் ரூபாய்களை இந்த அரசாங்கம் கடனாகப் பெற்றுள்ளது. ஆனால் ஆசிரியர்களுக்கு உரிய நேரத்தில் சம்பளம் கொடுக்க முடியவில்லை.

எனவே தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நாட்டின் பொருளாதார நிலைமை மோசமடையக்கூடும் என எச்சரித்த அவர், நாடு மீண்டும் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கு திறமையான குழுவொன்றை பாராளுமன்றத்திற்கு அனுப்புவது மக்களின் பொறுப்பு என வலியுறுத்தியுள்ளார்.

நவம்பர் 14ஆம் திகதி பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நவம்பர் 15ஆம் திகதி ஆட்சி அமைக்க வாய்ப்பு இருந்தாலும், அவசரப்பட்டு ஆட்சியைக் கைப்பற்றக் கூடாது என்று ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி, வரவிருக்கும் நெருக்கடி குறித்து நாட்டு மக்களுக்கு நினைவுபடுத்துவதாகவும் ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார். (ம-7)

### குளவிக் கொட்டு

## 6 தொழிலாளர்கள் வைத்தியசாலையில்

(பதுளை)

பசறை - டெமேரியா பெருந்தோட்டப் பகுதியில் 6 தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

4 பெண் தொழிலாளர்களும், 2ஆண் தொழிலாளர்களுமே இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

குறித்த அறுவரும் பசறை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## இரண்டு துப்பாக்கிகளுடன் புத்தளத்தில் ஒருவர் கைது

(புத்தளம்)

புத்தளம் - குருநாகல் வீதியில் கொட்டுகச்சி பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இரண்டு துப்பாக்கிகளுடன் சந்தேக நபரொருவர் நேற்றுப் பிற்பகல் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-7)

### மின்சாரம் தாக்கியதில்

## இரு பிள்ளைகளின் தாயார் உயிரிழப்பு

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை, லுனுகம் வெஹெர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மின்சாரம் தாக்கி இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளதாக லுனுகம் வெஹெர பொலிஸார் தெரிவித்தனர்.

யமுனா சதமாலி ஜயதிலக்க என்ற 28 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த தாயார் தனது வீட்டின் ஜன்னலில் துணியை பொருத்துவதற்காகச் சுவரில் ஆணி அடித்துக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது, உயிரிழந்த தாயாரின் இரண்டரை வயது குழந்தை, இரும்பு ஆணி ஒன்றை எடுத்து அருகிலிருந்த மின் இணைப்பில் பொருத்தி விளையாடிக் கொண்டிருந்துள்ளார்.

இதனை அவதானித்த எட்டு வயது குழந்தை, உயிரிழந்த தாயாரிடம் இது தொடர்பில் தெரிவித்துள்ளார்.

பின்னர், இந்த தாயார் உடனடியாக தனது குழந்தைகளை அங்கிருந்து வெளியே அழைத்துச் சென்று, மின் இணைப்பில் பொருத்தப்பட்டுள்ள இரும்பு ஆணியை வெளியே எடுக்க முயன்ற போது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த தாயாரின் கணவர் கொழும்பில் வேலை செய்து வருவதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)

## நோயாளர் காவு வண்டி கிளிநொச்சியில் விபத்து

### ஒருவர் படுகாயம்

கிளிநொச்சியில் நோயாளர் காவு வண்டி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நோயாளர்களை MR பரிசோதனைக்கு யாழ்ப்பாணம் அழைத்துச் சென்று விட்டு மீண்டும் மட்டக்களப்புத் திரும்பிக் கொண்டிருந்த மட்டக்களப்பு போதனா வைத்திய சாலை நோயாளர் காவு வண்டி கிளிநொச்சியில் மோட்டார் சைக்கிளில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞன் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நோயாளர் காவு வண்டியில் மூன்று நோயாளர்கள் பயணித்த நிலையில் நோயாளர்களுக்கு எந்த வித பாதிப்பும் இல்லை.

அவர்களும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7,316)

## 840 போதை மாத்திரைகளுடன் ஏழாலையில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

ஏழாலையில் 840 போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏழாலைப் பகுதியில் போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருப்பதாக சுன்னாக பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இளைஞனை கைது செய்ததுடன் இளைஞனிடம் இருந்து 840 போதை மாத்திரைகளையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த இளைஞன் ஏற்கனவே போதை மாத்திரைகளுடன் கைதாகி அது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நீதிமன்றில் நிலுவையில் உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,33)

## களனி பல்கலைக்கழக மாணவன் உயிரிழப்பு

களனி பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் பல்கலைக்கழக விடுதியின் மேல் மாடியில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கர விடுதியில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழகத்தில் நான்காம் வருடத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களனி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை - பகுதி I

13

**கலாநிதி க. தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

அரசாங்கத்தின் சிங்களத் தேசிய வாதம் மிகப்பலமாகத் தலை தூக்கியதில் தமிழ்ப் பகுதிகளில், குறிப்பாக நாட்டின் வடமாகாணத்தில் அரசியல் குழப்பநிலை தோன்றியது.

நாடு முழுவதும் அவசரகால நிலையை அரசு கொண்டுவந்தது. ஐக்கிய முன்னணியின் கூட்டணிக் கட்சிகளிடையே பிளவுகள் தோன்றின.

அதேவேளை, 1970 தேர்தலில் படுதோல்வியடைந்த ஐக்கிய தேசியக்கட்சி மீண்டும் செல்வாக்குப் பெற ஆரம்பித்தது. இனப் பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வு மூலமாகத் தீர்வு காணப்படும் என அது உறுதி அளித்தது. திறந்த பொருளாதாரத்தை முன்னெடுக்கப் போவதாக அறிவித்தது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் பங்கீட்டு அடிப்படையில் இலவசமாக வழங்கப்பட்ட இரண்டு கிலோக்கிராம் அரிசியை விட மேலதிகமாக எட்டு இறாத்தல் மாவும் இலவசமாக வழங்க அது உறுதி அளித்தது.

பழைய தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழரசுக் கட்சியின் தலைவர் அ.அமிர்தலிங்கம் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியை அமைத்து தமிழர் பிரதேசங்களுக்கு தனி நாட்டுக் கோரிக்கை முன்வைத்தனர்.

இத் தேர்தலில் கட்சிக்களுக்கு கிடைக்கப்பெற்ற ஆசனங்கள் பின்வருமாறு. ஐக்கிய தேசியகட்சி-140, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி-18, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-8, இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ்-1, சுயேட்சை-1, மொத்தம்-168 உறுப்பினர்கள் ஆகும்.

இலங்கையின் வரலாற்றிலேயே முதற்தடவையாக ஐக்கிய தேசியக் கட்சி மூன்றில் இரண்டிற்கும் அதிகமான இடங்களைக் கைப்பற்றி ஆட்சியைப் பிடித்தது. அதே வேளையில், இலங்கை பாராளுமன்ற வரலாற்றில், முதற் தடவையாக தமிழர் கட்சி ஒன்று இரண்டாவது அதிகப்படியான இடங்களைக் கைப்பற்றி பாராளுமன்றத்தில் அதிகாரப் பூர்வ எதிர்க் கட்சியாக வந்தது. அ.அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார்.

J.R.ஜெயவர்தன இலங்கைப் பிரதமரானார். 1978 இல் J.R.ஜெயவர்தன இலங்கை ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதன் பின்பு சு.பிரேமதாச பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இலங்கையின் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தம் அவர்கள் ஒரு தனி நாட்டிற்கான ஆதரவை நிபந்தனையின்றி துறந்து சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை, கறுப்பு ஜீலை கலவரத்தில் 3,000 தமிழர்கள் வரை சிங்களக் கும்பல்களால் படுகொலை செய்யப்பட்ட விரக்தி போன்ற காரணங்களால் அமிர்தலிங்கம் மற்றும் அனைத்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) பாராளுமன்ற உறுப்பினர்களும் 1983 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து பாராளுமன்றத்தை புறக்கணித்தனர்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் உறுப்புரை 66 (C) இன் பிரகாரம், பாராளுமன்றத்தின் அனுமதியின்றி தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ளாமையினால், அ.அமிர்தலிங்கம் 83.10.24 ஆம் திகதி தனது ஆசனத்தைத் துறந்தார். இவர் எப்போது தனது ஆசனத்தை துறந்தாரோ அப்போதிலிருந்து தனது எதிர்கட்சித் தலைவர் பதவியையும் இழந்தார்.

**பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு**

ஆண்டு ரீதியாக (1833 முதல் 1977வரை) சட்டமன்றத்தில் இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை அட்டவணை -5 காட்டுகிறது.

அட்டவணை -5

| காலம் (period) | உறுப்பினர்கள் எண்ணிக்கை | காலம் (period) | உறுப்பினர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1833-1889 | 16 | 1931-1947 | 61 |
| 1889-1910 | 18 | 1947-1960 | 106 |
| 1910-1920 | 21 | 1960-1977 | 151 |
| 1920-1923 | 37 | 1977-1989 | 168 |
| 1923-1931 | 49 | 1989- | 225 |

**பல் அங்கத்தவர்கள் தொகுதிகளின் தேவையும் உருவாக்கமும்**

1977 வரை இலங்கையிலிருந்த தேர்தல் முறையானது பெரும்பான்மை அடைந்தவர் (First Past the Post –FPP) வெற்றி பெறும் முறையாகும். அதாவது ஒரு தேர்தல் தொகுதியில் கூடுதலான வாக்குகள் பெற்றவர் வெற்றி பெற்றவராவர்.

ஒரு குறிப்பிட்ட சாதி, சமயத்தைச் சேர்ந்த மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு பரந்த பிரதேசத்தில் அவர்களிலும் வேறுபட்ட இன்னொரு சாதி, சமயத்தைச் சேர்ந்த மக்கள் அப் பரந்த பிரதேசத்தின் சில இடங்களில் கூடுதலாக சேர்ந்து வாழ்ந்தால், அச்சிறுபான்மையினருக்கும் பிரதிநிதித்துவம் வரக் கூடியதாக தேர்தல் தொகுதிகள் அமைய வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்படுகின்றன.

இரட்டை அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதி உருவாக்கப்படும் போது, கணித முறையில் பார்த்தால் ஒரு கட்சிக்கு அத்தொகுதியிலுள்ள சனத்தொகை/ வாக்காளர் எண்ணிக்கையில் குறைந்தது 34 சதவீத வாக்குகளைக் கொண்டிருந்தால் மட்டுமே அக்கட்சியிலிருந்து ஒருவர் தெரிவுசெய்யப்பட வாய்ப்புகள் உண்டு.

இதேபோல் மூன்று அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதி உருவாக்கப்படும் போது, கணித முறையில் பார்த்தால் ஒரு கட்சிக்கு அத்தொகுதியிலுள்ள சனத்தொகை / வாக்காளர் எண்ணிக்கையில் குறைந்தது 26 சதவீத வாக்குகளைக் கொண்டிருந்தால் மட்டுமே அக் கட்சியிலிருந்து ஒருவர் தெரிவு செய்யப்பட வாய்ப்புகள் உண்டு.

இவற்றை கருத்தில் கொண்டே பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகளும் உருவாக்கப்பட்டன.

**வாக்கின் சமபலம்**
( One man one Vote value)

வாக்கின் மூலம் பாராளுமன்ற அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் போது ஒருவரால் அளிக்கப்படும் வாக்கும் மற்றவரால் அளிக்கப்படும் வாக்கும் சமபலத்தைக் கொண்டதாக இருத்தலே ஜனநாயகமாகும்.

உதாரணமாக ஒரு தொகுதியில் சனத்தொகை / வாக்காளர் 10,000 பேராகவும் மற்றைய தொகுதியில் சனத்தொகை / வாக்காளர் 100, 000 பேராகவும் இருப்பின் முதலாவது தொகுதி வாக்காளரின் பலம் இரண்டாவது தொகுதி வாக்காளரின் பலத்தைப்போல் 10 மடங்காகும். எனவே தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யும் போது தொகுதிகளில் உள்ள சனத்தொகை/வாக்காளர் எண்ணிக்கை கிட்டத்தட்ட சமமாக இருக்கும் வண்ணம் எல்லை நிர்ணயம் செய்யப்படல் வேண்டும் என்பதே அடிப்படையாகும்.

எல்.எம். டி. த. சில்வா ஆணைக் குழுவின் (1947) எல்லை நிர்ணயத்தின் போது மாகாண மட்டத்தில் வாக்கின் பலம் எவ்வாறு இருந்ததென்பதை ஒப்பிட்டு பார்க்கும் போது வடமாகாணத்தில் குறைந்த சனத்தொகையைக் (23,300 பேர்) கொண்ட தொகுதியான வவுனியாவிற்கும் கூடிய சனத்தொகையைக் (71,100பேர்) கொண்ட தொகுதியான பருத்தித்துறைக்குமிடையேயுள்ள வாக்குப் பலம் 1:3 ஆக காணப்படுகின்றது. அதாவது வவுனியாத் தொகுதியிலுள்ள ஒருவரது வாக்கு பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள மூவரின் வாக்குகளுக்குச் சமனாகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபரீத...

விஜயகுமார் ரஞ்சித் (வயது-27) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக குறித்த நபர் நேற்று முன்தினம் (22) இரவு 12 மணியளவில் வீட்டில் தவறான முடிவெடுத்து (தூக்கில் தொங்கி) உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றபோது குடும்பத்தாரால் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மரணம் தொடர்பில் பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## இளம் வேட்பாளர்...

இவர் உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர் வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் உறுப்பினராக இருந்த அதேவேளையில் அங்கஜன் இராமநாதனின் ஜனநாயகத் தேசிய கூட்டணி சார்பில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,30)

## அராலியில்...

இடம்பெற்றுள்ளன.

யாழ்ப்பாணம் அராலி மேற்குப் பகுதியில், மாணவன் ஒருவன் மீது மின்னல் தாக்கியுள்ளது.

இதில் மாணவன் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளான்.

இதேவேளை அராலி மேற்குப் பகுதியில் உள்ள வீட்டின் மின் இணைப்பானது மின்னல் தாக்கத்தினால் திடீரெனத் தீப்பற்றி எரிய ஆரம்பித்தது.

இதன்போது விரைந்து செயற்பட்டு மின்சார இணைப்பினைத் தடை செய்த நிலையில் பாரியளவு அசம்பாவிதம் எவையும் ஏற்படவில்லை. (ம-7)

## நிராகரிக்கப்பட்ட...

கூட்டணி தாக்கல் செய்த வேட்பு மனுவை நிராகரிப்பதற்கு, மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி மேற்கொண்ட தீர்மானத்தை வலுவற்றதாக்கி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்புமனுக்கள் தெரிவத்தாட்சி அதிகாரியால் ஏற்கப்பட வேண்டுமென உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக வன்னி மாவட்டத்தில் தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுவை நிராகரித்து மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரி எடுத்த தீர்மானத்தை செல்லுபடியற்றத்தாக்கி உத்தரவிடக் கோரி ஜனநாயகத்தேசியக்கூட்டணியின் உறுப்பினரான பரராஜசிங்கம் உதயராசாவுடன் மேலும் இரண்டு வேட்பாளர்களால் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு பிரீத்தி பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களைப் பரிசீலித்த நீதியரசர்கள் ஆயம், நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுவை, தற்போதுள்ள சட்டத்தின்படி சம்பந்தப்பட்ட தெரிவத்தாட்சி அதிகாரி ஏற்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டியது.

இதன்படி ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பு மனுக்கள் தெரிவத்தாட்சி அதிகாரியால் ஏற்கப்பட வேண்டுமென உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-7)

## முன்னாள்...

ரோபர் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள பிரதான ஹோட்டல் ஒன்றில் சந்தேகத்திற்கிடமான வகையில் BMW ரக கார் ஒன்று நிறுத்தப்பட்டமை தொடர்பில் வாக்கு மூலம் வழங்குவதற்காக நேற்றுக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகியதன் பின்னர் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## நாய் குறுக்கே...

ளார்.

குறித்த இளைஞன் கடந்த 20 ஆம் திகதி முல்லைத்தீவில் மோட்டார் சைக்கிளில் வீதியால் பயணித்துக் கொண்டிருந்தவேளை நாய் ஒன்று குறுக்கே சென்ற நிலையில் விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்துள்ளார்.

பின்னர் மாஞ்சோலை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7)

## பருத்தித்துறை...

லும் கையிலும் சிறிய கூரிய ஆயுதத்தால் அறுத்த சம்பவமொன்று நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் இடம் பெற்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த மாதமளவில் வடமராட்சி கிழக்குப் பகுதியில் பாண் வியாபாரத்தில் ஈடுபட்ட முச்சக்கரவண்டி ஒன்றை மறித்துப்பாணைக் கடனுக்கு கோரியபோது குறித்த பாண் வியாபாரி கடன் கொடுக்க மறுத்த நிலையில் அவரிற்கு வாளால் வெட்டிய சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

மேலும் கடை ஒன்றில் பொருட்கள் கொள்வனவு செய்து கொண்டிருந்தபோது அந் நபரிற்கும்வாளால் வெட்டினார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நபருக்கு சில மாதங்களாக பிணை விண்ணப்பம் செய்யப்பட்ட நிலையிலும் சந்தேக நபருக்கு பிணை வழங்கப்படவில்லை.

இந்நிலையில் பருத்தித்துறை நீதிமன்றில்நேற்று வழக்கு நடைபெற்ற நிலையில் சிறையிலிருந்து கொண்டுவந்த சிறிய கூரிய ஆயுதம் ஒன்றினால் தனது கழுத்து மற்றும் கைப் பகுதியில் வெட்டி காயம் விளைவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த சந்தேக நபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7)

## அரச...

விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மால் வீதியிலுள்ள புதிய ஜனநாயக முன்னணியின் அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

தாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வேதன அதிகரிப்பை வழங்கத் திட்டமிட்டமிட்டதாகவும், வேதன அதிகரிப்பை வழங்க முடியாவிட்டால், அதற்காக ஒதுக்கப்பட்ட பணம் எங்கே? என்பதை அரசாங்கம் உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.10.23
சீட்டிழுப்பு இலக்கம் 5634
C 5 4 9 2 4 0
அத சம்பத
C 9 2 4 0
சீட்டிழுப்பு இலக்கம் 209

தன நிதானய
திகதி - 2024.10.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1664
F 13 33 62 70 F
032148

மெகா பவர்
திகதி 23/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1982
K 21 31 65 71 77
048105

லக்கி 7 VIP
திகதி 2024.10.23
சீட்டிழுப்பு இலக்கம் 0460
Y 6 0 0 9 9 6 Y

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3876
சீட்டிழுப்பு திகதி 23.10.2024
Q 17 18 27 50
Q 158524

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.23
சீட்டிழுப்பு இலக்கம் 943
தனுசு 31 38 49 60 தனுசு
068322 15

உத்தியோகபூர்வ முடிவுகள்
23.10.2024 வெற்றி வாரம் 342 வர்ணம் பச்சை
V 6 2 3 0 7 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,273,708.00
42667

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2608 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 23.10.2024 தினம் புதன்கிழமை
05 57 74 75 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,586,952.80

சீட்டிழுப்பு வாரம் 4320 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.10.23 தினம் புதன்கிழமை
07 23 50 53
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,040,838.00
187861

சனிதா
திகதி 2024.10.23 வெற்றி வாரம் 4769
08 50 61 72 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,949,314.40
55965

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 22 05 19 28 32
1784
23.10.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 552,041,965.40

ஜயோதா Jayoda
திகதி 2024.10.23 வெற்றி வாரம் 2071 வர்ணம் மஞ்சள்
46 56 62 64 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,964,226.00

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2434
சீட்டிழுப்பு திகதி : 2024.10.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,623,136.80
11 42 59 64 F
493447


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி விழா நாயகனை சேவை நயந்து வாழ்த்துகிறோம்



எமது பாடசாலையின்
பிரதி அதிபராக அரும் பெரும்
பணியாற்றி 23.10.2024
அன்று இளைப்பாறும்

**திரு. நாகலிங்கம் விமலநாதன்**
B.Sc, PGDE, PGDEM, MED, M.Phil, SLPS I
(பிரதி அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

அவர்களுக்கு இனிய மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் பிரார்த்திக்கிறோம்.

Congratulations

பாவல னென்போர் உமை பைந்தமிழ் இலக்கியத்து வித்துவத்தால்
காவல னென்போர் உமை கல்விக்கண் திறந்திட்ட கருணையதால்
நாவல னென்போர் உமை அப்பிரான்போல் நற்பணிகள் ஆற்றியதால்
சேவக னென்போர் உமை செய்திட்ட சேவையதன் செம்மையதால்
ஆவலொடு வாழ்த்துகிறோம் ஆண்டு நூறு வாழியவே!

**சேவை விபரம்:**

- 01.10.1992 - 31.12.2000 - யா/இணுவில் இந்துக் கல்லூரி, கணித ஆசிரியர்
- 01.01.2001 - 23.10.2012 - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கணித ஆசிரியர்
- 24.10.2012 - 05.04.2015 - பகுதித் தலைவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
- 06.04.2015 - 17.09.2015 - அதிபர், யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்
- 18.09.2015 - 11.02.2016 - பகுதித் தலைவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
- 12.02.2016 - 02.04.2023 - உதவி அதிபர், யாழ்/ மத்திய கல்லூரி
- 03.04.2023 - 23.10.2024 - உதவி அதிபர், பிரதி அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

ஆசிரியர் கழகம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
(C-1439)

# விசா சேவைகள்



- வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பாக முகவர்களைத் தொடர்பு கொள்ள முன்பு அவதானம் செலுத்துங்கள்.
- சட்ட விரோதமாக எந்தவொரு நாட்டிற்கும் செல்ல முயற்சி செய்யாதீர்கள்.
- நேர் வழியில் வெளிநாடு செல்ல பல வழிகள் உள்ளன.

12 வருட காலமாக சிறந்த முறையில் சேவையாற்றி வரும் winstar visa Consultants உடன் ஆலோசித்து வெளிநாடு செல்லுங்கள்

**CANADA UK FRANCE**



- சட்டத்தரணி மூலம் ஒப்பந்தம்
- நேர்மையான முறையில் விண்ணப்பிக்கப்படும்.
- 99% கடந்த கால வெற்றி வீதம்
- சிநேக பூர்வமான சிறந்த ஆலோசனைகள்

முன்பதிவு செய்து நேரில் வாருங்கள்
ஆலோசனைக் கட்டணம் உண்டு.

முன்பதிவுகளுக்கு : **071 071 6979**

**Winstar Consultants Pvt Ltd**
45, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
(4968)

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1445)

**076 825 7716** (ஆகாஸ்)

## சிறுநீரகம் தேவை

அவசரமாக $A^+$ வகை குருதியுடைய
சிறுநீரகம் தேவைப்படுகிறது.
வயது எல்லை 25 - 40
தொடர்புகளுக்கு :
**077 041 6405**
Whatsapp
0031617990096(கொலன்ற்)
(2333)

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு :
(C-1446)
**075 033 6759**

## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
35,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
(470)

**APEX TRAVELS**
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## நீங்களும் விரைவில் அமெரிக்காவில்...இன்னும் சில நாட்களே உள்ளன

**அமெரிக்க அதிஸ்ட விசா**

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

55000 இலவச விசாக்கள்

0768226244

V2 TRAVELS

V2 Travels
(C-1441)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 0777469777 | 0743900350 | 0743900352 | 0768226237 | 0743900353 | 0743900351 |
| 0764550673 | 0768226240 | 0768226243 | 0777058777 | 0777720322 | 0764550675 |
| 0768226242 | 0768226238 | 0777726322 | 0764550674 | 0764550670 | 0777718322 |
| 0764550671 | 0776699892 | 0768226236 | | 0768226230 | 0776697960 |

## X MARD

வியாழன் முதல் சனி வரை — 24,25,26 10.2024

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs.379 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 999.00 Anchor 400g | Rs.249.00 ~~300~~ Fems 8 Pcs | Rs. 59.00 ~~90~~ Anchor Yoghurt | Rs. 1799.00 ~~2000~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2589.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 299.00 ~~380~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1150~~ Anchor Plus |
| Rs. 149.00 ~~175~~ Santoor Soap | Rs. 439.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3335~~ Diabeta Plus | Rs. 379.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 5kg ~~1150~~ Prima Wheat Flour | Rs. 3499.00 ~~3900~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |

(C-1444)

Call For information 074 1011 345
மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும், வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்)

## 31 ஆம் நாள் அந்தியேட்டி நினைவலைகள்

மலர்வு 1957 . 08 . 05



உதிர்வு 2024 . 09 . 24

**அமரர் திருமதி மல்லிகாதேவி தனபாலசிங்கம்**

திதி : அபரபக்க சப்தமி

என்றும் இனிதே நாம் வாழ அத்தனையும்
ஈர்ந்த தெய்வமே கண்ணியமாய் எமைக்
காத்து ஞாலம் போற்றும் வாழ்வு தந்த
சுடரொளியே நீ மறைந்தாலும் உன்
நினைவலைகள் நீங்காது
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

24.09.2024 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 24.10.2024 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து ஊரெழு பூரண நிலையத்தில்(பலாலி வீதி, கலைவாணி முன்பள்ளி அருகாமை உடையார் வீதியில் அமைந்துள்ள) ஆத்மசாந்திப் பிரார்த்தனை இடம்பெறும். மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பைங்கிலிட்டி,
குப்பிளான் தெற்கு, குப்பிளான். (2307)

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.